**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 312/2022**

PW–1

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வராஜ்(PW1) | | |
| Father's Name | அய்யாசாமி | தொழில் | |
| Village | சேவூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 42 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused 1, 2 Present)*

**முதல் விசாரணை:–**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு விசைத்தறி வைத்து நடத்தி வருகிறேன். நான் ஆஜர் முதல் எதிரி இடம் சம்பவம் நடந்த தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு ரூபாய் 5000 கடனாக வாங்கி இருந்தேன். அதில் நான்காயிரம் ரூபாயை திருப்பிக் கொடுத்து விட்டேன். மீதி ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டி இருந்தது. அதை மறுநாள் தருவதாக சொல்லி இருந்தேன்.நான் வெளியூர் சென்று இருந்த சமயத்தில் சதீஷ்குமார் என் அக்கா மகன்களை அழைத்து மிரட்டி இருக்கிறார்.03.08.2022ம் தேதி இரவு 8 மணி அளவில் மீதி பணம் ஆயிரம் ரூபாயை திருப்பிக் கொடுப்பதற்காக சதீஷ்குமாரின் வீட்டிற்கு நான் சென்றேன். சதீஷ்குமார் இடம் பணம் கொடுத்து விட்டு சதீஷ்குமாரிடம் நான் தான் பணத்தை கொடுத்து விடுகிறேன் என்று சொன்னேனே என் அக்கா மகன்களை எதற்கு மிரட்டினாய் என்று கேட்டேன். சதீஷ் என்னை கையால் இடது கன்னத்தில் அறைந்தார். நான் கீழே விழுந்து விட்டேன். என்னுடன் என் மனைவியும் இருந்தார். அவர் என் அக்கா மகன்களுக்கு போன் செய்தார். என் அக்கா மகன்களான நவீன் குமார் பிரதீப் குமார் இருவரும் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள். நான் வீட்டிற்கு செல்லலாம் என்று திரும்பிய போது சதீஷ்குமார் இரும்பு கம்பி ஒன்றை எடுத்து வந்து நவீன் குமாரின் இடது காது அருகே அடித்தார். அதில் காயம் பட்ட நவீன் குமாரை ஆம்புலன்ஸ் மூலம் அன்னூர் தனியார் மருத்துவமனைக்கு அழைப்பு சென்றோம். நவீன் குமாரை தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து சிகிச்சை செய்தார்கள். நான் சேவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்

வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் . அந்த புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் உள்ள சங்கதிகளை எங்கள் ஊர் தலைவர் சொன்னார். சதீஷ்குமார் நவீன் குமாரை அடிக்க பயன்படுத்திய கம்பியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அது தற்போது என்னிடம் காட்டப்படுவது தான். இரும்பு கம்பி (அ.சா.பொ.1)ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கும் சதீஷ்குமாருக்கும் கொடுக்கல் வாங்கல் இருப்பதாக சொல்லி உள்ளேன் அது சம்பந்தமாக காவல் துறையினரிடம் ஏதாவது ஆவணங்கள் சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. அது தொடர்பான எந்த ஆவணமும் என்னிடமும் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் நகல் எனக்கு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். என்னுடைய புகாரில் சம்பவம் ஸ்ரீனிவாசா கடைக்கு முன்பாக நடந்ததாக சொல்லிவிட்டு தற்போது சாட்சியமளிக்களில் ஒன்றாம் எதிரியின் வீட்டில் வைத்து நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஸ்ரீனிவாசா நகை கடையும் ஒன்றாம் எதிரியின் வீடும் அருகருகே உள்ளது. புகாரில் சீனிவாசா நகைக்கடை முன்பு சம்பவம் நடந்ததாக தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 03.08.2022ம் தேதி சதீஷ்குமார் என் வீட்டில் வைத்து தான் என்னிடம் பணம் கேட்டார் என்றால் இல்லை மொண்டி பாளையத்தில் வைத்து கேட்டார்.என் புகார் வாக்கு மூலத்தில் சதீஷ்குமார் என்னை என் உடலில் எந்த பாகத்தில் அடித்தார் என்று நான் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளேன். எனக்கும் சதீஷ்குமாருக்கும் வாலிபால் விளையாட்டு தான் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். ஆம்புலன்ஸுக்கு யார் போன் செய்தார்கள் என்றால் பிரதீப் குமார் போன் செய்தார். மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் உடன் யார் யார் சென்றோம் என்றால் பிரதீப் குமார், சுரேஷ்குமார், ருக்குமணி ஆகியோர் சென்றார்கள். எந்த இடத்தில் இருந்து ஆம்புலன்சில் புறப்பட்டு சென்றோம் என்றால் ஸ்ரீனிவாசா நகைக்கடை முன்பு. நான் கருவலூர் வடக்கு தெற்காக செல்லும் ரோட்டிற்கு கிழக்காக உள்ள அண்ணாநகர் பகுதியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ஸ்ரீனிவாசா நகைக்கடை மேற்சொன்ன வடக்கு தெற்கு ரோட்டிற்கு மேற்புறம் உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணா மெயின் வீதி கிழக்கு மேற்க்காக செல்லும் ரோட்டிற்கு ஸ்ரீனிவாசா நகை கடைக்கு எதிர்ப்புறத்தில் சதீஷ் வீடு உள்ளது என்றால் சரிதான். போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்த போது நவீன் குமார் மயக்க நிலையில் இருந்தார். போலீசார் சம்பவம் நடந்த மறுநாள் மருத்துவமனைக்கு காலை 11 மணியளவில் வந்து விசாரித்தார்கள். எனக்கும் சதீஷ்குமாருக்கு இடையே ரூபாய் 50,000 கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றும் நான் அதை திருப்பி தராத நிலையில் சதீஷ்குமார் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக சொல்லி இருந்ததால் நான் என் உறவினரை வைத்து இந்த பொய் புகாரை கொடுத்துள்ளேன் என்றால்

சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |